# முத்தாயம்மாள் நினைவு
## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

காக்காவேரி, இராசிபுரம் - 637408,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா
(சேலம் - பெரியார் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது)
தொலைபேசி : 04287- 225837,225937, 97912 87237
Website : www.muthayammal.co.in
email : mmcascommerce@gmail.com, metmmcas@gmail.com

### வணிகவியல் துறை - பன்னாட்டுக் கருத்தரங்கு

தலைப்பு

“உலகப் பொருளாதார சீர்திருத்தத்தால் இந்திய தொழில் முன்னேற்றம் அடைவதற்கான பொருளாதார நுணுக்கங்கள்” என்ற தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கு.

**Department of Commerce**

**International Conference on “Growth Strategies of Indian Industries and Development for Economic Reforms in India”.**

நாள் : **28.02.2017**

### கல்லூரி குறித்த பார்வை :

முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளையானது 1983-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 34 ஆண்டுகள் பழமை மற்றும் பாரம்பரியமிக்க இந்த அறக்கட்டளையின் கீழ் காக்காவேரியில் முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி, முத்தாயம்மாள் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்தாயம்மாள் தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் சென்னையில் எம்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆகியவை இயங்கி வருகின்றன. நாமக்கல் மாவட்டம் - இராசிபுரத்தில் இருந்து ஆத்தூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் (SH-79) 3-ஆவது கிலோ மீட்டரில் காக்காவேரியில் இக்கல்லூரி அமைந்துள்ளது. “முயற்சி திருவினையாக்கும்” என்ற தாரக மந்திரத்துடன் இக்கல்வி நிறுவனங்களை திரு. இரா. இராமசாமி அவர்கள் துவக்கினார்.

கிராமப்புற மக்களும் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் துவக்கப்பட்ட இக்கல்வி நிறுவனங்களில் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் உயர்கல்வி பெறுகின்றனர். கடந்த 31 ஆண்டுகளாக குறிப்பாக முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் 50000-க்கும் மேற்பட்ட பட்டய பட்டதாரிகளை உருவாக்கி அவர்களின் எதிர்கால வாழ்வு சிறக்க மிக முக்கியமானதாக இக்கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ளன.

### முத்தாயம்மாள் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி :

2014-15-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு உயர்கல்வித் துறையாலும் சேலம்-பெரியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றும் இக்கல்லூரி இயங்கி வருகிறது. ஒழுக்கம் மற்றும் கல்வி ஆகிய இரண்டினையும் இரு கண்களாகக் கொண்டு இக்கல்வி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இளநிலை பாடப்பிரிவுகள் - 8-ம், வரும் கல்வியாண்டு 2017-18 முதல் இளநிலை கணினி பயன்பாட்டியல் (BCA), முதுநிலை பாடப்பிரிவுகளில் கணிதம் (M.Sc Mathematics), இயற்பியல் (M.Sc Physics), கணினி அறிவியல் (M.Sc Computer Science), மற்றும் வணிகவியல் (M.Com) ஆகிய பாடப்பிரிவுகளும் துவங்கப்பட உள்ளன.

### கல்லூரி அமைவிடம்:

இராசிபுரம் நகரில் இருந்து 3 கி.மீ கிழக்கில் இக்கல்வி நிறுவனம் அமையப் பெற்றுள்ளது. சேலம் மாநகரில் இருந்து 30 கி.மீ, ஈரோடு மாநகரில் இருந்து 60 கி.மீ, திருச்சி மாநகரில் இருந்து 125 கி.மீ, கோவை மாநகரில் இருந்து 162 கி.மீ, சென்னை மாநகரில் இருந்து 350 கி.மீ, பெங்களூர் மாநகரில் இருந்து 235 கி.மீ, நாமக்கல் நகரில் இருந்து 32 கி.மீ, கரூர் நகரில் இருந்து 82 கி.மீ, கள்ளக்குறிச்சி நகரில் இருந்து 96 கி.மீ, ஆத்தூர் நகரில் இருந்து 48 கி.மீ, திருச்செங்கோடு நகரில் இருந்து 40 கி.மீ, தூரத்தில் இக்கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரிக்கு அருகில் உள்ள ரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையம் இராசிபுரம் ஆகும்.

### வணிகவியல் துறை :

வணிகவியல் துறையின் சார்பில் பி.காம், பி.காம் (சிஏ), பிபிஏ ஆகிய பாடப்பிரிவுகள் இயங்கி வருகின்றன. வரும் கல்வி ஆண்டுகளில் முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் பாடப்பிரிவுகள் துவங்கப்பட உள்ளன. இங்கு பயிலும் மாணவ, மாணவிகள் ஒழுக்கத்துடன் கூடிய உயர்கல்வி கற்று அதிக மதிப்பெண்கள் பெற்று உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை பெறவும், சிறந்த தொழில் முனைவோராக உருவாகவும், நல்ல நிறுவனங்களில் அதிக ஊதியத்துடன் பணியில் சேர கல்லூரி வேலை வாய்ப்புத்துறையின் மூலம் நேர்முகத் தேர்வு குறித்த பயிற்சி, எழுத்துத் தேர்விற்கானப் பயிற்சி ஆகியவையோடு ஆளுமைத்திறன் முன்னேற்றம், ஆங்கில தகவல் தொடர்பு போன்றவையும் கற்றுத்தரப்படுகின்றன.

மேலும் சிறந்த தலைமைப் பண்பைப் பெற்றிடும் உத்திகள், பல்கலைக்கழகத் தேர்வில் சிறப்பிடம் பெற அதற்குண்டான பயிற்சி வகுப்புகள் துறை சார்ந்த கருத்தரங்கப் பயிற்சி முகாம்கள் போன்றவை இங்கு மாணவ, மாணவிகளுக்காக நடத்தப்பட்டு வருகின்றன. இக்கல்லூரி மாணவ, மாணவிகள் பல்கலைக்கழகத் தேர்வுகள் மட்டுமல்லாது விளையாட்டிலும் சிறப்பிடம் பெற்று வருகின்றனர்.

### பன்னாட்டுக் கருத்தரங்கம் :

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் காரணமாக இப்போது உலக வணிகம் மிகவும் சுருங்கிவிட்டது. வங்கி, காப்பீடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளில் மின்னணுவியல் புகுத்தப்பட்டதன் காரணமாக புதிய தொழில்நுட்பங்களும், புதுமைகளும் உருவாகிவிட்டன. இப்போது 24X7 என்ற அடிப்படையில் உலகில் உள்ள எப்பொருளையும் கணினி மூலம் மின்னணு-வணிகவியல் முறையில் வீட்டில் இருந்தபடியே நாம் பெற முடியும். புதிய தொழில்நுட்பம், அறிவியல் வளர்ச்சி, புதுமை இவைகள் தான் புதிய நவீன உலகினை உருவாக்கும். ஒரு பக்கம் மக்கள் தொகைப்பெருக்கம், தீவிரவாதம், உலக வெப்பமயம், தட்ப வெப்பநிலை மாற்றம், உணவுப்பற்றாக்குறை ஆகியவை அனைத்து நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக உள்ளன. விவசாய நிலங்கள், தொழிற்சாலைகளாகவும், வீடுகளாகவும், வீட்டுமனைகளாகவும் உருவாகி வருகிறது. விவசாயத்திற்கு மட்டுமல்லாது குடிப்பதற்குகூட நீர்ப்பற்றாக்குறை ஏற்படுகிறது. இவையாவும் நாட்டின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் தடைக்கற்களாக உள்ளன. மேலும், புதிய பொருளாதார சீர்திருத்தம் காரணமாக சில இடங்களில் தொழில் வளர்ச்சி அதிகரித்தும் பல இடங்களில் தொழில் வளர்ச்சி குறைந்தும் காணப்படுகின்றன. இதனால் மனிதவள மேம்பாடு, சந்தையிடுதல், வங்கியியல், காப்பீடு, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், விவசாயம், பிற தொழில்களில் பல சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டி உள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் இப்பன்னாட்டு கருத்தரங்கம் பல கேள்விகளுக்கு சிறந்த விடைகளை அளிக்க உள்ளது.

### கருத்தரங்கின் முக்கியத்துவம் :

* உலகப் பொருளாதார சீர்திருத்தத்தால் உள்நாட்டு வணிகம் அடைந்த வளர்ச்சிகள் மற்றும் வீழ்ச்சிகள்.

* தொழில் துறை வளர்ச்சி மற்றும் தளர்ச்சியினால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பு.

* விவசாயத்துறை வீழ்ச்சியால் ஏற்பட்ட உணவு உற்பத்தி குறைவு மற்றும் விவசாயிகளின் பாதிப்பு.

* பொருளாதார சீர்திருத்தத்தால் ஏற்பட்ட வேலைவாய்ப்பு, வேலை இழப்பு, பொருளாதார மந்தநிலை, பணவீக்கம் போன்றவை.

* தனியார்மயமாதல், உலகமயமாதல், தாராளமயமாதல் காரணமாக ஏற்பட்ட சேவைத்துறை வளர்ச்சி மற்றும் தளர்ச்சி.

* தட்பவெப்ப நிலை மாற்றம், சுற்றுப்புறச்சூழல் மாசுபாடு, நுகர்வோர் நலன் பாதுகாப்பு.

பன்னாட்டு கருத்தரங்கில் முன்னிறுத்தும் ஆய்வுக் கட்டுரைத் தலைப்புகள் :

* சர்வதேச வணிகம்
* கணினி மூலம் அடைந்த சந்தையியல் மற்றும் தொழில் வளர்ச்சி
* விவசாயம், விவசாயப் பொருளாதாரம்
* வங்கி, காப்பீடு, பிற சேமிப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்
* மனை விற்பகம் (ரியல் எஸ்டேட்)
* நுகர்வோர் விழிப்புணர்வு

மற்றும் பிற இவை சார்ந்த பல்துறை ஆய்வுகள் வழிகாட்டுதல் :

*ஆய்வுக்கட்டுரைகள் சொந்தப் படைப்பாகவும், வேறு எந்த வகையிலும் வெளியிடப்படாததாகவும் இருக்க வேண்டும்.

* தமிழ் ஆய்வுக்கட்டுரைகள் தமிழ் ஒருங்குகுறியில் (Tamil Unicode) எழுத்துருவில் (font) இருக்க வேண்டும். ஆய்வுக்கட்டுரைகள் பிற எழுத்துருவில் இருப்பின் அதற்குரிய எழுத்துருவை (font) இணைக்கப்படவேண்டும்.

* கட்டுரை தமிழ்மொழியில் இருப்பது வரவேற்கத்தக்கது. இருப்பினும் பல்துறை பயன்பாடு கருதி ஆங்கிலத்திலும் (English) கட்டுரை அமையலாம்.

* ஆய்வுச் சுருக்கம் 200 சொற்களிலும் கட்டுரை 6 பக்கங்களுக்கு மிகாமலும் இருக்கவேண்டும்.

* கட்டுரை ஏ4 (A4) அளவில், கட்டுரைத் தலைப்பு 14 புள்ளி (points)அளவில் தடித்த (bold) எழுத்திலும், கட்டுரையாளர் பெயர் 12 புள்ளி அளவில் தடித்த எழுத்திலும், உள் தலைப்புகள் 10 புள்ளி அளவில் தடித்த எழுத்திலும், முதன்மைக் கட்டுரை 10 புள்ளி இயல்பான எழுத்துருவிலும் அமைய வேண்டும். ஆய்வுக்கட்டுரைகள் வல்லுநர்களின் பரிந்துரையின்படி கீழ்க்கண்ட பன்னாட்டு ஆய்விதழ்களில் அதன் புலத்தின் தலைப்புக்கேற்றவாறு வெளியிடப்படும்.

ஆய்வகம்: பல்துறை ஆய்வுகளுக்கான பன்னாட்டு ஆய்விதழ் (Aayvagam : An International Journal of Multi-disciplinary Research) – ISSN – 2321 – 5739.

பழமொழிநாட்டார்: வழக்காற்றியலுக்கான பன்னாட்டு ஆய்விதழ் (Pazhamozhi : An International Journal of Folkloristics) – ISSN – 2321 - 5712.

அச்சுக்கூடம்: தொடர்பாடலுக்கான பன்னாட்டு ஆய்விதழ் (Achchukkudam : An International Research Journal of Communication) – ISSN – 2321 – 5720.

கருத்தரங்க பதிவுக் கட்டணம் மற்றும் ஆய்விதழ் செயலாக்கக் கட்டணம் :

இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சித்துறை மாணாக்கர்களுக்கு - ரூ. 900 (இரண்டிற்கும் சேர்த்து) (அ) $ - 13 டாலர்

பேராசிரியர்கள், துறை வல்லுநர்கள், கல்வியாளர்கள் மற்றும் பிற துறையினர்களுக்கு - ரூ. 1000 (இரண்டிற்கும் சேர்த்து) (அ) $ - 15 டாலர்

ஆய்வுச் சுருக்கம் அனுப்ப கடைசி நாள்: 10.02.2017

முழுக்கட்டுரை மற்றும் பதிவுக்கட்டணம் - ஆய்விதழ் செயலாக்கக் கட்டணம் அனுப்ப கடைசி நாள்-14.02.2017.

கருத்தரங்க கட்டணத்தை NEFT/ RTGS முறையிலோ (அ) வங்கி வரைவோலையாகவோ செலுத்தலாம் (இராசிபுரம், நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு மாற்றத்தக்க வகையில்)

வங்கியின் பெயர்:

கனரா வங்கி

கிளை: சந்திரசேகரபுரம் அக்ரஹாரம் - 637401, இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

சேமிப்பு கணக்கு எண் : 5803101000115

IFSC குறியீடு : CNRB0005803

வங்கி கிளை எண் : 5803

சேமிப்பு கணக்கின் பெயர்:

முதல்வர் - முத்தாயம்மாள் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காக்காவேரி, இராசிபுரம் - 637 408, நாமக்கல் மாவட்டம். தமிழ்நாடு, இந்தியா

அமைப்புக் குழு உறுப்பினர்கள் :

முதன்மை புரவலர்

திரு. இரா. இராமசாமி,
தலைவர் – முத்தாயம்மாள் கல்வி நிறுவனங்கள்

புரவலர்

திரு. இரா. பிரேம்குமார்,
அறக்கட்டளை முதன்மை நிர்வாகி மற்றும் பொருளாளர் - முத்தாயம்மாள் கல்வி நிறுவனங்கள்.

அமைப்புச் செயலாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்

முனைவர் மா.இரா. இலட்சுமிநாராயணன்
முதல்வர்- 97912-87237

கருத்தரங்க அமைப்பாளர்

பேரா. திரு. ஆர். சங்கர்,
உதவிப்பேராசிரியர் - துறைத்தலைவர் - வணிகவியல் துறை - 73733-60088

துணை அமைப்பாளர்கள்

பேரா. எஸ். திவ்யா, உதவிப்பேராசிரியர்- வணிகவியல் துறை - 94893-14777
முனைவர் என். நாகராஜன், உதவிப்பேராசிரியர் - பொருளியல் துறை - 99947-38409
பேரா. கே. சதீஸ்குமார், உதவிப்பேராசிரியர் - வணிகவியல் துறை - 94424-37696
பேரா. ஏ. விஜயகுமார், உதவிப்பேராசிரியர் - வணிகநிர்வாகவியல் துறை - 96599-86545
பேரா. எஸ். இந்துமதி, உதவிப்பேராசிரியர்- வணிகவியல் துறை - 99942-82772

Our other Educational Institutions:

1. Muthayammal Polytechnic College, Kakkaveri, Rasipuram - 637 408 (TN) - India.
2. Muthayammal Industrial Training Institute, Kakkaveri, Rasipuram - 637 408 (TN) - India.
3. M.R. Matriculation Hr. Sec. School, Nerkundram, Chennai-600 107

# முத்தாயம்மாள் நினைவு

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

காக்காவேரி, இராசிபுரம் - 637 408,
நாமக்கல் மாவட்டம்,
தமிழ்நாடு, இந்தியா
04287 -225837, 225937

பதிவுப் படிவம்

பெயர் : ..................................................

பதவி : ..................................................

கல்லூரி (அ) கல்வி நிறுவனம் (அ)

பல்கலைக்கழகத்தின் பெயர்:

..................................................

முகவரி : ..................................................

..................................................

..................................................

அலைபேசி எண் : ..................................................

மின்னஞ்சல் முகவரி : ..................................

ஆய்வுக்கட்டுரை தலைப்பு : ............................

..................................................

RTGS/DD குறித்த விவரம்:.............................

நாள் : ..................................................

தொகை : ..................................................

வங்கியின் பெயர் மற்றும் கிளை : ...................

..................................................

நாள் : கையொப்பம்

குறிப்பு : இப்படிவத்தினை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்